# யூலை – 15 – திங்கள்

## புனித போனவெந்தூர் - ஆயர் - மறைவல்லுனர்

**ஆண்டவரின் பெயரே நமக்குத் துணை! விண்ணையும் மண்ணையும் உண்டாக்கியவர் அவரே! திபா. 124:8**

---

## முதல் வாசகம் : விடுதலைப் பயணம் 1 : 8 – 14, 22

ஆந்நாட்களில், யோசேப்பை முன்பின் அறிந்திராத புதிய மன்னன் ஒருவன் எகிப்தில் தோன்றினான். அவன் தன்குடிமக்களை நோக்கி, ”இதோ, இஸ்ரயேல் மக்களினம் நம்மைவிடப் பெருந்தொகையதாயும் ஆள்பலம் வாய்ந்ததாயும் உள்ளது. அவர்கள் எண்ணிக்கையில் பெருகிடாதவாறு தந்திரமாய்ச் செயல்படுவோம், வாருங்கள். ஏனெனில் போர் ஏற்படுமாயின், அவர்கள் நம் எதிரிகளுடன் சேர்ந்து கொள்வர் நம்மை எதிர்த்துப் போரிடுவர் இந்நாட்டிலிருந்தும் வெளியேறி விடுவர்” என்றுகூறினான். எனவே கடும்வேலையால் அவர்களை ஒடுக்குவதற்காக அடிமை வேலைவாங்கும் அதிகாரிகள் அவர்கள்மேல் நியமிக்கப்பட்டனர். பார்வோனுக்காக அவர்கள் பித்தோம், இராம்சேசு ஆகிய களஞ்சிய நகர்களைக் கட்டியெழுப்பினர். ஆயினும் எத்துணைக்கு எகிப்தியர் அவர்களை ஒடுக்கினார்களோ, அத்துணைக்கு அவர்கள் எண்ணிக்கையில் உயர்ந்தனர். பெருகிப்பரவினர். இதனால் எகிப்தியர் இஸ்ரயேல் மக்களைக் கண்டு அச்சமுற்றனர். எகிப்தியர் இஸ்ரயேல் மக்களைக் கொடுமைப்படுத்தி வேலைவாங்கினர். கடினமான சாந்து செங்கல் வேலையாலும், அனைத்து வயல்வெளி வேலையாலும், மேலும் கொடுமைப்படுத்தி வாங்கிய ஒவ்வொரு வேலையாலும், அவர்கள் வாழ்க்கையே கசந்து போகும்படி செய்தனர். பின்னர், பார்வோன் தன் குடிமக்கள் அனைவருக்கும் ஆணைவிடுத்து, ”பிறக்கும் எபிரேய ஆண்மகவு அனைத்தையும் நைல்நதியில் எறிந்துவிடுங்கள். பெண்மகவையோ வாழவிடுங்கள்” என்று அறிவித்தான்.

**பதில்பாடல் :** ஆண்டவரின் பெயரே நமக்குத் துணை

## நற்செய்தி : மத்தேயு 10 : 34 --- 11 : 1

அக்காலத்தில் இயேசு தம்சீடர்களை நோக்கிக் கூறியதாவது : ”நான் உலகிற்கு அமைதி கொணரவந்தேன் என எண்ணவேண்டாம். அமைதியை அல்ல, வாளையே கொணரவந்தேன். தந்தைக்கு எதிராக மகனையும் தாய்க்கு எதிராக மகளையும் மாமியாருக்கு எதிராக மருமகளையும் நான் பிரிக்கவந்தேன். ஒருவருடைய பகைவர் அவரது வீட்டில் உள்ளவரே ஆவர். என்னைவிடத் தம் தந்தையிடமோ தாயிடமோ மிகுந்த அன்புகொண்டுள்ளோர் என்னுடையோர் என கருதப்படத் தகுதியற்றோர். என்னைவிடத் தம் மகனிடமோ மகளிடமோ மிகுதியாய் அன்பு கொண்டுள்ளோரும் என்னுடையோர் எனக்கருதப்படத் தகுதியற்றோர். தம் சிலுவையைச் சுமக்காமல் என்னைப் பின்பற்றி வருவோர் என்னுடையோர் எனக் கருதப்படத் தகுதியற்றோர். தம் உயிரைக் காக்கவிரும்புவோர் அதை இழந்துவிடுவர். என்பொருட்டுத் தம் உயிரை இழப்போரோ அதைக் காத்துக்கொள்வர். ”உங்களை ஏற்றுக்கொள்பவர் என்னை ஏற்றுக்கொள்கிறார். என்னை ஏற்றுக்கொள்பவரோ என்னை அனுப்பினவரையே ஏற்றுக்கொள்கிறார். இறைவாக்கினர் ஒருவரை அவர் இறைவாக்கினர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் இறைவாக்கினருக்குரிய கைம்மாறுபெறுவார். நேர்மையாளர் ஒருவரை அவர் நேர்மையாளர் என்பதால் ஏற்றுக்கொள்பவர் நேர்மையாளருக்குரிய கைம்மாறுபெறுவார். இச்சிறியோருள் ஒருவருக்கு அவர் என்சீடர் என்பதால் ஒரு கிண்ணம் குளிர்ந்த நீராவது கொடுப்பவரும் தம் கைம்மாறு பெறாமல் போகார் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். இயேசு தம் பன்னிரு சீடருக்கும் அறிவுரை கொடுத்து முடித்ததும் பக்கத்து ஊர்களில் கற்பிக்கவும் நற்செய்தியை அறிவிக்கவும் அவ்விடம் விட்டு அகன்றார்.

**தியானம்:** குடும்பம், பங்கு, சமூகம் என்பதுதான் இறைவனின் திருச்சபை. அங்கு எந்தவித வேறுபாடுமில்லாது வாழ்ந்து கட்டியெழுப்ப வேண்டும். ஆனால் நாங்கள் போட்டி மனப்பான்மை, பிளவு, நான் பெரியவன், பெரியவள் என்ற தற்பெருமை, இவற்றின் மூலம் மாமி மருமகள், கணவன் மனைவி, பிள்ளைகள் பெற்றோர்கள் பிரச்சனைகள் தொடர்ந்து கொண்டே போகின்றது. இவற்றிற்கு காரணம் எமது செப வாழ்வு குறைந்து கொண்டு போவேதேயாகும். அவற்றை முறியடிக்க வேண்டுமென்றால் முதலில் எங்கள் மத்தியில் செபவாழ்வைக் கட்டியெழுப்புவோம். இன்றைய நற்செய்தி வாசகத்தில் “நான் உங்களுக்கு அமைதி கொடுக்க அல்ல மாறாக பிளவை ஏற்படுத்த வந்தேன்” என்று இறைமகன் இயேசு கூறுவதைப் (மத்.10:1)ல் பார்க்கின்றோம். ஆம் அவர் எதற்காக இவ்வாறு அச் சந்தர்ப்பத்தில் கூறுகிறார் என்று சிந்திக்க மறந்து விடுகிறோம். காரணம் தமக்கு ஏற்படும் ஒவ்வொரு சிலுவையையும் ஏற்றுக் கொள்ளாது வாழும் ஒவ்வொருவரும் தன்னுடையோர் அல்ல என்பதை சுட்டிக்காட்டுகிறார். இன்று நாங்களும் எமக்கு ஏற்படும் துன்பங்கள் யாவற்றையும் ஏற்றுக் கொண்டு இறைவனிடம் ஒப்புக் கொடுத்துவிட்டு சாமாதானத்துடன் வாழாது கடவுளைத் தேடுவோமானால் அவரது உரிமையைப் பெற்றுக் கொள்ளத் தகுதியற்றோர்களாகி விடுவோம். எனவேதான் தன்பொருட்டு எற்றுக்கொள்பவர் யாவரும் தமது உயிரைக் காத்துக்கொள்ளத் தயாராக உள்ளார் என்பதை தெளிவாக வெளிப்படுத்துகிறார். (மத். 10:39) எனவே இறைவன் எம்மை அழிக்க அல்ல மாறாக புதுவாழ்வு கொடுக்கவே வந்தார். எனவே இதை உணர்ந்தவர்களாக எம்மைக் காத்துக்கொள்ள வேண்டுமானால் எங்களை இறைவனிடம் முழுவதுமாக ஒப்புக்கொடுப்போம்.